மெ 2010 மலர் 3 இதழ் ௫

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY
For Private Circulation Only

# அன்புக்குரிய பாபுஜி மகராஜ் அவர்களின் 111வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்




பாபுஜி மகராஜின் 111வது பிறந்த நாள் விழா, திருப்பூர் DJ பூங்காவில், 2010,ஏப்ரல் 29 முதல் மே1 வரை கொண்டாடப்பட்டது. சுமார் 9000 அப்யாசிகள், இதில் பங்கேற்றனர். 29ஆம் தேதி, மாஸ்டர் சத்சங்கம் நடத்தி, பல புதிய புத்தகங்களை வெளியிட்டார். 30ஆம் தேதி காலை, சத்சங்கம் நடத்திய பிறகு, பாபுஜி மகராஜின் மூன்று செய்திகளை அவர் வாசித்தார். அதன் பின், 9 திருமணங்களை நடத்தி ஆசி வழங்கினார்.

2010, ஏப்ரல் 19 தேதியிட்ட (பாபுஜியின் மகா சமாதி நாள்)முதல் செய்தியில், "தன் பயணத்தின் இறுதிக் குறிக்கோளான, தெய்வீகத்தன்மையை அடைய விரும்பும் ஆன்மாவில், இந்த மலர்ச்சி ஏற்படும்போது, அனைத்து நிகழ்வுகளும் நம் எண்ணப்படி நடக்கின்றன. தொடக்கத்தில், அப்யாசிகளுக்கு அடிப்படைத்தேவைகள் அளிக்கப்படுகின்றன. அதன் பின், விடாமுயற்சியால் வளர்ச்சி அடைய வேண்டியது, அப்யாசிகளின் கடமையாகிறது.

2010, ஏப்ரல் 29ல் பெறப்பட்ட இரண்டாவது செய்தி: "விசுவாசமுள்ள ஆன்மாக்கள், இங்கே, கீழே கூடியிருப்பது மனைதத் தொடுவதாக உள்ளது. உண்மையான அன்பு கீதம் எங்களை நோக்கி வருகிறது... இந்த பிறந்தநாள் விழாவின் கொண்டாட்டங்களுக்கு அப்பாற்பட்டு, மிஷன் முழுவதுமே அந்நிலைக்கு உயர்வது, தெய்வீகத்தைக் கவர்ந்து, இதயங்களை ஒளிபெறச் செய்கிறது."

30ந் தேதிகாலை பெறப்பட்ட, சிறப்பாக மாஸ்டரைக்குறித்துச் சொல்லப்பட்ட செய்தியில், "இயற்கையாகவே நிர்வாகத்திறன் கொண்ட என்மகனே, நீ மனிதர்களுக்கு எல்லாம் தலைவன். இந்த பரிமாணமானது, மிஷனில் உனக்குச்சிறப்பானதொரு இடத்தை அளிக்கிறது. வரவிருக்கும் நூற்றாண்டுகளுக்கு, இந்த மிஷனில், மிகப்பெரிய முன் உதாரணச்சின்னமாக நீ திகழ்வாய்... எந்த தனித்தன்மை வாய்ந்த சக்தியில்லாமல், உலகம் வெகு காலத்திற்கு முன்னதாகவே ஒன்றுமில்லாமல் ஆகி இருக்குமோ, அதைக் கண்டு கொள்ளும் வண்ணம், நாளைய உலகம் நல்ல விதமாக ஒன்றுகூடட்டும்."

மாஸ்டரின் மீதான அன்பு, மாஸ்டருடன் சத்சங்கம், மற்றும் மாஸ்டருக்குக் கீழ்ப்படிதல் ஆகிய மூன்றும், ஒருசாதகன் அல்லது பக்தனிடம் இருக்கவேண்டிய தேவைகள் என்று மாஸ்டர் கூறினார். நாம் ஒவ்வொருவரும், தினமும் சாதனா செய்வதன்மூலம், தெய்வீகச்சுடரை, தொடர்ந்து எரியச்செய்ய வேண்டும். இதயங்களில் அன்புததும்ப, ஆன்மீகமுன்னேற்றத்திற்காக எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி, பண்டாராக்களில் ஒன்றுகூடி, பாபுஜியுடன் இருந்த நாட்களை நினைவு கூர்ந்தார். "இது கொடுத்து வாங்கும் சூழ்நிலை அல்ல. அவர், அவரது விருப்பப்படி, அவர் மகிழும்சமயம், நாம் அதற்கு ஏற்றவர்கள் என்று அவர் நினைக்கும்போது, கொடுப்பதைப்

For the complete audio of this speech please visit http://www.sahajmarg.org/audio/talk/april-30-2010-tiruppur






பெற்றுக் கொள்ளும் முயற்சியில், நம்மிடம் இருப்பவை அனைத்தையும் திறந்தவெளியில் போடுவதாகும்" என்று கூறினார்.

"சகஜமார்க்கம் எளிமையான வாழ்க்கையைப் போதிக்கிறது... நம் தேவைகள் எல்லாம் பூர்த்திசெய்யப்படும், நம் விருப்பங்கள் இந்நிலைக்குப் பொருந்தாது, என்று பாபுஜி மகராஜ் உறுதி அளித்ததை நினைவில் கொண்டு, நாம் அனைவரும் எளிமையாக ஆகவும், தேவைகளைக் குறைத்துக்கொள்ளவும், விருப்பங்களை எளிமையாக்கிக் கொள்வதற்கும், முயற்சிசெய்யவேண்டும்."

இரவு உணவுக்குப்பின் இருந்த கலை நிகழ்ச்சியில், LMOIS பள்ளி ஆசிரியகளின் நடனமும், மும்பை அப்யாசிகளின் ஒரு நாடகமும் மற்றும் டாக்டர் ஜெயந்தி, குமரேஷ் ஆகியவர்களின் இசைநிகழ்ச்சியும் இருந்தன. அப்யாசிகள், விழாவின் ஆன்மீகச் சூழலில் மூழ்கித் திளைத்தனர். மேலும் இந்தவிழா, மாஸ்டருக்கு சேவை புரிவதற்கும், அவரது வேலையில் பங்கேற்கவும் அனைவருக்கும் ஒரு வாய்ப்பினை அளித்தது.





## மாஸ்டரின் பயணம்

### சென்னை



ஜபல்பூரில் நடைபெற்ற பசந்த் விழாவின் பின்னர், பிப்ரவரி 10ம் தேதி, மாஸ்டர் சென்னை திரும்பினார். உடன் அவர், லாலாஜி மெமோரியல் ஒமேகா பள்ளிக்கு (LMOIS) சென்று, அங்கு நடக்கும் கட்டிடவேலைகளப் பார்வையிட்டார். ஒரு குழந்தையைப் போன்ற உற்சாகத்தினை அவரிடம் கண்ட அப்யாசிகள், கடந்த பலவாரங்கள் தொடர்ந்து பயணம் செய்த பின்னரும், அவர் ஏன் ஓய்வெடுக்கச் செல்லவில்லை என்று வியந்தனர். அதன்பின் சில நாட்கள் மாஸ்டர் நன்கு ஓய்வெடுத்துக் கொண்டார்.

பிப்ரவரி 15அன்று, ரஷ்யாவில் இருந்து வந்திருந்த அப்யாசிகளுடன், காலை உணவருந்தினார். சாஸ்திரங்கள், கோவில்கள், மத வழிபாடுகள் ஆகியவை பற்றி அவர்களுடன் பேசினார். 'மூலாதாரமான வீட்டை அடைவதே, நம் வாழ்வின் குறிக்கோள் ஆகும். அதற்கான வழியாக மதம் முன்பு அறியப்பட்டது. ஆனால் மதமானது, உலக மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்திவிட்டது. ஆன்மீகம்தான் ஒருங்கிணைக்கிறது' என்று அவர்களிடம் கூறினார்.

பயத்தை எவ்வாறு நீக்குவது என்ற ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில், "கிறிஸ்துவ மதத்தில், பரிபூர்ணமான அன்பானது, பயத்தை அகற்றுகிறது என்று ஏசுநாதர் கூறுகிறார். நம்மிடம் பரிபூர்ண அன்பு இல்லை, அன்பு கூட இல்லை. நம்மிடம் இருப்பதெல்லாம் பற்று, சார்ந்து இருத்தல் மற்றும் தேவை மட்டுமே. அன்பு எங்கே உள்ளது? எனவே அன்பு இல்லாத இடத்தில் பயம் உள்ளது. நாம் ஒருவரிடம் அன்பு செலுத்துவதாக நினைக்கிறோம், ஆனால் உண்மையிலேயே அன்பாக இல்லை. அன்பு மட்டுமே பயத்தை நீக்கமுடியும். உங்கள் தந்தையிடம் பயத்துடன் இருந்தால் அவரை நேசிக்கமுடியாது. நான் உன்னை நேசிக்கிறேன் என்று நீங்கள் கூறினால் அதன்படி இருக்கவேண்டும். வெறும் மேலோட்டமான வார்த்தைகளாக இருக்கக் கூடாது" என்று கூறினார்.

அடுத்த சில நாட்களுக்கு, மாஸ்டர் அப்யாசிகளை, முக்கியமாக வெளிநாட்டு அப்யாசிகளை சந்திப்பதில் ஈடுபட்டு இருந்தார். தினமும் மாலை,

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்



With abhyasis from Mumbai







காட்டேஜ் முன், புல்வெளியில் அமர்ந்து, அப்யாசிகளுடன் உரையாடியதுடன், அந்த அதிர்ஷ்டம் வாய்ந்த அப்யாசிகளுக்கு சிட்டிங்கும் கொடுத்தார்.

அவர், பிப்ரவரி 25ம் தேதி, தியானக்கூடத்தில், சத்சங்கமும் அதனைத் தொடர்ந்து சில திருமணங்களையும் நடத்தினார்.

மும்பையில் இருந்து, சுமார் 400அப்யாசிகள், மாஸ்டருடன் இருக்க வந்திருந்தனர். அவர்களுக்கு அடிக்கடி சிட்டிங்குகள் கொடுத்தும், பலரை தனியே ஒவ்வொருவராக சந்தித்தும், சிறப்பாகக் கவனித்துக்கொண்டார். சனி அன்று மாலை, தங்கும் விடுதி 'A'யில் அவர்களை சந்தித்து அளவளாவினார். எல்லா மையங்களுக்கும் பயணிப்பது, தற்சமயம் தனக்குக் கடினமாக இருப்பதால், சென்னைக்கு வந்து தன்னுடன் நேரம் செலவழித்த அப்யாசிகளுக்கு அவர் நன்றி கூறினார். அவர்கள் அடிக்கடி வருவார்கள் என்று தான் நம்புவதாகக் கூறினார்.

பிப்ரவரி 28 அன்று, பாபுஜி மகராஜின் வாழ்க்கை பற்றிய ஒரு சிறப்பு நாடகத்தை, மும்பை அப்யாசிகள் அளித்தனர். பாபுஜியின் வாழ்கையின் பல்வேறு நிகழ்வுகளை விளக்கிய அந்நாடகம், நெகிழ்வூட்டுவதாக இருந்தது. நிகழ்ச்சி நிறைவுற்றபின், மாஸ்டர் பங்கேற்றவர்களை, காட்டேஜில் சந்தித்து, பாபுஜி மகராஜுடன் இருந்த சில அன்பான தருணங்களை நினைவு கூர்ந்தார். தெய்வீகமான அந்த சூழ்நிலையில், அனைவரும், தாங்கள் உண்மையிலேயே ஷாஜஹான்பூரில் இருப்பதாக உணர்ந்தனர்.

## திருச்சி

30 அப்யாசிகளுடன் மாஸ்டர் திருச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார். அவரை உள்ளூர் அப்யாசிகள் வரவேற்றனர். உடனடியாக அவர், நகரத்திலிருந்து 8கி.மி. தொலைவில் உள்ள, ஜானகி பண்ணைக்கு சென்றார். அவர், மார்ச் 3 புதன்கிழமையன்று, ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தினார். திரும்பி வந்தவுடன், மாட்டுக் கொட்டகைக்குச் சென்று, புதிதாகப் பிறந்திருந்த 5 கன்றுக்குட்டிகளுக்குப் பெயரிட்டார். உற்சாகமான மனநிலையில் இருந்த அவர், அவைகளுக்குப் பெயரிட்டதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

மார்ச் 4ம் தேதி, மாஸ்டர், ஜானகி பண்ணையின் நிலத்தில், நாற்று நடுவதைப் பார்வயிட்டார். நிறைய அப்யாசிகளும் அதில் சேர்ந்துகொண்டனர். நிலங்களில் சேறாக இருந்தபோதிலும், அங்கு விழாக்கால சூழ்நிலை நிலவியது. பிறகு மாஸ்டர், அங்கிருந்த அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். மாலையில் மாஸ்டர், வீட்டின் முன்பு இருந்த புல் வெளியில் வந்து அமர்ந்து, சில வெளிநாட்டு அப்யாசிகளைச் சந்தித்தார். அதன்பின், சத்சங்கம் நடத்தினார்.

மார்ச் 7 ஞாயிறு அன்று, தியானகூடத்தில் மாஸ்டர் நடத்திய சத்சங்கத்தில், உள்ளூர் அப்யாசிகளும் அதிக அளவில் பங்கேற்றனர். அவர் ஆரோக்கியமாகவும், உற்சாகத்துடனும் காணப்பட்டார். அங்கு தங்கிய நாட்களில், பண்ணையைச் சுற்றி நடந்துவர, பலதருணங்களில் வெளியே வந்தார். தொடர்ந்து செய்து வந்த, பலவேறு வேலைகளையும், மிகவும் தேவையான அமைதியான தருணங்களையும், அவர் சிறப்பாக இணைத்தார். மார்ச் 10ம் தேதி சென்னை திரும்பிய மாஸ்டர், கல்கத்தா வழியாக கரக்பூர் சென்றார்.

## CRESTகரக்பூர்

மாஸ்டர், வளாகத்திற்கு 12ம் தேதி வந்தடைந்து, மாலை 5 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். கரக்பூர் CRESTல், மார்ச் 12 முதல் 14 வரை, இரண்டாவது NPTP (New Prefects Training Program) நடைபெற்றது. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரிபெக்ட்டுக்கள், சகஜ மார்கத்தின் பல்வேறு அம்சங்களையும் நன்கு அறிந்து கொண்டு, அதன் மூலம் ஒரு பிரிபெக்ட் ஆக தங்கள் பணியினை நன்குசெய்ய உதவுவதற்காக, இந்த நிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

மாஸ்டர், கஸேபோவைத் திறந்துவைத்து, ஒய்வாக அமர்ந்தார். அப்யாசிகள் அமைதியாக அவரை சூழ்ந்து அமர்ந்தனர். அப்யாசிகள், மற்ற சமயங்களில் கஸேபோவில் வந்து அமரலாமா என்று கேட்டபோது, 'ஆமாம், இது அனைவருக்காகவும் தான்' என்று பதிலளித்தார். அந்த இடத்தின் சுத்தம், புனிதத்தன்மை மற்றும் தூய்மை எப்போதும் பாதுகாகப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். அதன்பின், கங்கை, கணேஷா ஆகிய உருவச்சிலைகள் வைக்கப்படவேண்டிய இடங்களைச் சுட்டிக்காட்டி, அதன் பக்கபலமான அமைப்புக்களைப் பற்றியும் கலந்துரையாடினார். பின்வரும் நாட்களில் மாஸ்டர், அந்தச்சிலைகள் வைப்பதை மேற்பார்வையிட ஏதுவாக, மறுநாளில் இருந்தே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மார்ச் 15முதல் 21வரை, ஈரானில் இருந்து வந்த அப்யாசிகளுக்காக, பன்னாட்டு கூட்டம் ஒன்று CRESTல் ஏற்பாடு செய்யப்பட்டது. மாஸ்டருடன்











சில நாட்கள், அவரது பிரசன்னத்தில் இருப்பதற்கு, அவர்கள் அழைக்கப்பட்டனர்.

மிக உற்சாகமான 'சலாம்' உடன் தியானக்கூடத்திற்கு வந்து, அநேகமாக எல்லா சிட்டிங்குகளையும் மாஸ்டரே நடத்தினார். இரானியர்களும், அதே உற்சாகத்துடனும், மனப்பூர்வமாகவும், ஒரே குரலில் 'சலாம்' என்று கூறினர். இளைஞர் கூட்டம், 30 இரானிய பிரிபெக்ட்கள் கலந்து கொண்ட பிரிபெக்ட்கள் கூட்டம் (அதில் மாலையில் நடந்த வினா - விடை நிகழ்ச்சியில் மாஸ்டர் கலந்துகொண்டார்) தினசரி பயிற்சியைப் பற்றிய தெளிவுரை நிகழ்ச்சி, பெண்களின் பங்கு, பத்து நியமங்கள், ஒழுக்கமும் குண உருவாக்கமும், ஆகிய பொருள்களைப்பற்றிய கலந்துரையாடல், விபிஎஸ் இ ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகள் இரானிய அப்யாசிகளுக்காக நடத்தப்பட்டன. மாஸ்டர் இரானுக்கு 5 புதிய பிரிபெக்ட்களைத் தயார் செய்தார். மாஸ்டருடன், ஒவ்வொருவரும் பங்குபெற்ற வினா-விடை நிகழ்ச்சி, அந்த வாரத்தின் இறுதிப்பயனாக அமைந்தது.

இரானிய அப்யாசிகள் மாஸ்டரைப் பார்க்க வந்திருந்த சமயம், இரானிய புதுவருடமாகவும் அமைந்தது. அவர்கள் அனைவரும் மகிழும் வண்ணம், கடைசி செவ்வாய் மாலை, நௌருஜ் முன்பு, சாஹார் - ஷான்பேஹ் - சூரி என்று அழைக்கப்படும் சடங்கு ஒன்று நடத்தப்பட்டது. மூன்று சிறிய விழாப்பந்தங்கள் ஏற்றப்பட்டு, பாட்டு, தாளத்திற்கேற்ப, அனைவரும் அதனைத் தாண்டினர். மாஸ்டர், தன் கால்ஃப்கார்ட் வண்டியில் வந்து, இந்நிகழ்ச்சியைக் கண்டு களித்தார்.

மார்ச் 20 அன்று நௌருஜ், அதாவது, இரானிய புது வருடம் ஆகும். சாப்பாட்டு அறையில், பாரம்பரியமான முறையில், ஒரு மேசையில் பல பொருட்கள் வைக்கப்பட்டு, அதன் முக்கியத்துவம் பற்றி மாஸ்டருக்கு சிறிய விளக்கம் கூறப்பட்டது. ஒரு சிறிய சங்கீதம் மற்றும் நடன நிகழ்ச்சிக்குப் பிறகு, இரானியர்கள் தயாரித்திருந்த இரவு உணவை மாஸ்டரும், மற்றும் அங்கு கூடியிருந்த அனைவரும் உண்டு மகிழ்ந்தனர். இரானிய புது வருட வரவை முன்னிட்டு, இரவு 10:30 மணி சத்சங்கம் பற்றிக் கொடுக்கப்பட்ட எதிர்பாராத, வியப்புமிக்க அறிவிப்பானது, அந்த நாளையும், அவர்களது பயணத்தையும் முழுமை பெறச் செய்தது.

மார்ச் 17 அன்று, மாஸ்டர், கங்கை மற்றும் கணேஷாவின் சிலைகள் நிறுவப்பட்டதை மேற்பார்வையிட்டார். 21 மார்ச் அன்று கொல்கத்தா திரும்பிய அவர், சகோ. அஜய் பட்டர் இல்லத்தில் தங்கினார். கண்ணீர் மல்க நின்ற அப்யாசிகளிடம் விடைபெற்று, மார்ச் 24 அன்று சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார். இரானிய அப்யாசிகள், தங்கள் அன்பைக் கண்ணீரின் மூலம் வெளிப்படுத்தி, அன்புக்குரிய மாஸ்டருடன் தாங்கள் இருந்த அந்த அற்புதமான வாரத்தின் நினைவுகளை, இதயங்களில் எடுத்துச் சென்றனர்.

## கர்நாடகாவின் ஒன்றுகூடல்

சென்னை திரும்பிய பின், மாஸ்டரின் உடல்நலம் சற்று பாதிக்கப்பட்டதால், பார்வையாளர்கள் காட்டேஜுக்கு அனுமதிக்கப்படவில்லை. ஆசிரமத்தில் இருந்த அப்யாசிகள், ஞாயிறு அன்று சத்சங்கத்தில் அவரைக் காணமுடிந்தது.

ஏப்ரல் 2 முதல் 4 வரை, கர்நாடகாவில் இருந்து சுமார் 3000 அப்யாசிகள் வந்து கூடினர். மாஸ்டர், இந்த 3 நாட்களில், 5 சத்சங்கங்கள் நடத்தி, அப்யாசிகளின் இதயங்களை முழுமையாக நிரம்பச் செய்தார்.

ஆசிரமம் முழுமையும் சுத்தம் செய்ய, மணப்பாக்கம் ஆசிரத்தின் புதிய AMC குழுவால், அநேக வேலைகள் திட்டமிடப்பட்டன. ஆசிரமத்தில் கிடக்கும் குப்பைகூளங்களை அப்புறப்படுத்துதல், மாந்தோப்பு பகுதி, உரம்தயாரிக்கும் பகுதி, வாகனங்கள் நிறுத்தும் பகுதி, சிற்றுண்டிச்சாலை, மற்றும் கழிவறைகள் ஆகிய இடங்களைச் சுத்தம் செய்தல், போன்ற பல வேலைகளை, 250 க்கும் மேற்பட்ட திறமைவாய்ந்த தன்னார்வத் தொண்டர்கள், கடும் வெயிலையும் பாராது செய்தனர். மிகப்பெரிய வேலைகளை உற்சாகத்துடன் எடுத்துச் செயல்பட்ட தொண்டர்கள், வேலை செய்யும்போது, மாஸ்டரின் பிரசன்னத்தை உணர்ந்தனர்.

3ந் தேதி மாலை, மாஸ்டர் தன் அறையில் அமர்ந்து, T.V. மூலம் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தார். அதில் பங்கேற்ற அப்யாசிகளை பின்னர் சந்தித்து, அவர்களுடன் சிறிதுநேரம் செலவிட்டார்.


குழந்தைகள், விபிஎஸ்இ பாடத்திட்டத்திருந்து எடுக்கப்பட்ட பல்வேறு விஞ்ஞானப் பரிசோதனைகளை செய்து காட்டினர்.

ஏப்ரல் 4, ஞாயிறு சத்சங்கத்திற்குப்பிறகு, சகோ. துரைஸ்வாமி ஐயர், அவரது சில எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார். அதன் பிறகு சுருக்கமாகப் பேசிய மாஸ்டர், மாநில மற்றும் மொழியின் மீதான வெறியுடன்கூடிய பற்றை நீக்க வேண்டியதன் தேவையைக் குறிப்பிட்டார்.

மாஸ்டர், அடுத்தவாரம் முழுவதையும், ஆசிரமத்தில் அமைதியாகக் கழித்தார். 9ந் தேதி, சத்சங்கத்திற்குப் பிறகு, 9 திருமணங்களை நடத்திவைத்தார். தமிழ் மற்றும் மலையாள புதுவருடமான 14ம் தேதி அன்று, சத்சங்கம் நடத்தினார். சுமார் 4500 உள்ளூர் அப்யாசிகள் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர்.

மாஸ்டர், 16ம் தேதி காலை, கோயம்புத்தூர் வழியாகத் திருப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார். 29, 30 ஏப்ரல் மற்றும் மே 1ம் தேதி, பாபுஜி மகராஜின் பிறந்த நாள்விழாவின்போது அவர் திருப்பூரில் இருப்பார்.

சுற்றுப்பயணம் செய்தபோது, பேசிய ஊக்கமளிக்கும் உரைகள் மற்றும் கலந்துரையாடல்களைக் கொண்ட, ஹார்ட்ஸ்பீக் வரிசையில் ஒரு புதிய புத்தகம்.







இது, மதுரை, திருப்பூர், திருச்சி, சென்னை போன்ற தமிழ்நாட்டின் பல இடங்களில், மாஸ்டர் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பு ஆகும். இந்த வரிசையின் இரண்டாவது வெளியீடான இத்தொகுப்பில், 30 வருடங்களுக்கு முன்பு, 1979ல் ஆற்றிய ஒரு உரையும் உள்ளது.

4 மணி நேரம் ஒலிப்பதிவு செய்யப்பட்ட இத்தொகுப்பு, சில அற்புதமான உரையாடல்கள், நடைமுறைக்குத் தேவையான வினாக்களுக்கு மாஸ்டர் பதில் கூறிய வினா - விடைப் பகுதிகள் ஆகியவற்றையும் கொண்டுள்ளது.




### புகைப்பட ஆல்பம்

இந்த வரிசையில் வெளியிடப்படவிருக்கும் முதல் ஆல்பம், பாபுஜியின் ஓவியங்களின் தொகுப்பாகும். தரமுள்ள, கனமான கருப்பு வண்ணக் காகித பின்னணியில் 20 புகைப்படங்கள் உள்ளன.


### புகைப்படங்கள்


பாபுஜி, மற்றும் நம் மாஸ்டரின் சமீபத்திய, சுமார் 20 புகைப்படங்கள்.

### காப்பகப் பதிப்புகள்


புதிய புகைப்படவரிசைகளில், பாபுஜி மற்றும் மாஸ்டரின் படங்கள், விருப்பத்திற்கேற்ற அளவுகள், படச்சட்டங்களில் வழங்கப்பட்டிருக்கின்றன.


| | |
|---|---|
| சத்யோதயம்(கன்னடம் - மறுபதிப்பு) | டெய்லி ரிஃப்லெக்ஷன்ஸ் (சீனமொழி) |









| | |
|---|---|
| சகஜ மார்க்கக் கோட்பாடுகள் வால்யூம்.1 | மனிதனின் பரிணாமவளர்ச்சியில் மாஸ்டரின் பங்கு |




| | |
|---|---|
| பத்து நியமங்களின் விளக்க உரை (மராத்தி) | ப்ரியதம் சே ப்ரியதம் தக் கா ஸஃபர் (பாகம் - 2) |




## விபிஎஸ்இ செயல்பாடுகள் - தார்வாட்.

மார்ச் 27 அன்று, SDM சென்ட்ரல் ஸ்கூல், தார்வாடில், விபிஎஸ்இ நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. பெங்களூரைச் சேர்ந்த சகோ. ஆஷா மற்றும் சகோ. மாதுரி நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சி, இங்கு இரண்டாம் முறையாக நடத்தப்படுகிறது.

ஹூப்ளியில், 2009, ஆகஸ்ட்டில் SRCM ஆல் நடத்தப்பட்ட விபிஎஸ்இ நிகழ்ச்சியில் கலந்து கொண்ட, SDM சென்ட்ரல் ஸ்கூல் முதல்வர், திருமதி சாதனாவின் வேண்டுகொளுக்கு இணங்க இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

நன்னெறிகள், நன்னெறிகளை அடைய 3 வழிகள், மனதை ஒழுங்குபடுத்துதல் ஆகியவை, நிகழ்ச்சியின்போது பேசப்பட்டன. பங்கேற்றவர்கள் கேட்ட கேள்விகளின் மூலம், நிகழ்ச்சியை அவர்கள் நன்கு வரவேற்றது தெரியவந்தது. இதுபோன்ற இன்னும் பல நிகழ்ச்சிகள் தங்கள் பள்ளியில் நடைபெறவேண்டும் என கருத்துத் தெரிவித்தனர்.

## தன்னார்வத் தொண்டர் - பயிற்சி காகிநாடா, ஆ.பி.

ஆந்திரப்பிரதேசம், காகிநாடா மையத்தில், பிப்ரவரி 13,14 அன்று, மண்டல அளவிலான இரண்டு நாள் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சி, மண்டலப் பொறுப்பாளர், சகோ. K. மது அவர்களால் திட்டமிடப்பட்டு, காகிநாடா மையப் பொறுப்பாளர், சகோ. கோசுரி யதுசூர்யா அவர்களால் செயலாக்கப்பட்டது. ஊக்கமுள்ள தொண்டர்களுக்கு, ஒரு மையத்தில் எவ்வளவு வேலைகள் செய்யப்படவேண்டும் என்று தெரிவிப்பதே இந்நிகழ்ச்சியின் கருத்தாகும். மிஷனின் நோக்கங்கள் அனைவருக்கும் சென்றடைய இது உதவும். இந்த 2 நாள் நிகழ்ச்சி, விபிஎஸ்இ ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சி, வரவேற்புக்கூட்டங்களை திட்டமிட்டு நடத்துதல், இல்லங்களில் கூட்டங்கள், ஆகியவற்றை முக்கியமாகக் கொண்டு நடத்தப்பட்டது. குழந்தைகளுக்கான செயல்பாடுகளுக்கு கால வரையறுத்தல், அட்டவணை தயாரித்தல், விஞ்ஞான முறைகளைப் பற்றிய விளைவுகள், தலைமைப் பொறுப்பேற்கும் திறன், விளையாட்டு போன்ற பல விஷயங் வழங்கப்பட்டன.



150 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் பங் முறையில் வரவேற்கப்பட்டது.





## வானொலி ஒலிபரப்பு

ஏப்ரல் 17 அன்று, கர்நாடகா தும்கூரில் உள்ள, ரேடியோ சித்தார்த்தாவில், சகஜ மார்க்க தியானமுறை பற்றி அறிந்து கொள்ள, நேர்முகப் பேட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. வினாக்களுக்கு, பெங்களூர் மையத்தைச் சேர்ந்த சகோதரி வசந்தகுமாரி, 40 நிமிடங்கள், கன்னடத்தில் விடையளித்தார். தனி ஒருவருக்கு, சகஜ மார்க்கம் எவ்வாறு பயனளிக்கிறது?

மனமாற்றத்திற்கு தியானத்தின்தேவை, சமநிலை வாழ்க்கை, சகஜ மார்க்கத்தின் முதல் நோக்கம், மற்றும் மாஸ்டரின் பங்கு ஆகிய பொருள்கள்பற்றி கலந்துரையாடப்பட்டது. உள்ளூர் சமூகத்திற்கு பயன் அளிக்கும் வகையில், நிகழ்ச்சிகளை தினமும் காலை 6 மணியிலிருந்து இரவு 8 வரை ஒலிபரப்பும் ரேடியோ சித்தார்த்தா, SSIT கல்லூரி நடத்தும் ஒரு சமுதாய நோக்கு உள்ள FMசானல் ஆகும்.

## புதிய பிரிபெக்ட்கள் பயிற்சி நிகழ்ச்சி

புதிய பிரிபெக்ட்களின் இரண்டாவது குழுவிற்கான பயிற்சி நிகழ்ச்சி, கரக்பூர் க்ரெஸ்ட்டில், மார்ச் 12 முதல் 14 வரை நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் காலை 6 மணிக்கு இருந்த குழுக்கலந்துரையாடலைத் தொடர்ந்து, சத்சங்கமும், காலை உணவும் இருந்தன. 9 மணிக்கு, விஸ்பர்ஸ் புத்தகத்திலிருந்து மேற்கோள்கள் படிக்கப்பட்டு, நினைத்துப் பார்க்கப்பட்டன. அதைத் தொடர்ந்து உரைகள் இருந்தன. மதிய உணவும், அதன்பின் சிறிது ஓய்வும் எடுத்துக் கொண்டு மீண்டும் கூடிய பங்கேற்பாளர்கள், நேர்மறையில் யோசித்தல், மனதின் வழிகாட்டுதலைப் பின்பற்றுதல், மற்றும் ஆலோசனை, அறிவுரை வழங்குவதைத் தவிர்ப்பதின் தேவை ஆகியவை பற்றி குழுக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

6 பேச்சாளர்களில் 4 பேர், பாபுஜி மகராஜிடம் வந்து 1970ல் சகஜ மார்க்கத்தில் சேர்ந்த வெளிநாட்டவர் என்பது, இந்த இரண்டாவது குழுவின் புதிய அம்சமாகும். 'சகஜ மார்க்கம் - ஒரு வாழும் வழி' என்பதுபற்றி ஜெர்மனியைச் சேர்ந்த டோரிட் வார்னிங் என்பவரும், 'ஒரு பிரிபெக்ட்டின் பணி' என்பதுபற்றி அல்மோராவைச் சேர்ந்த சௌபால் பூபேந்திரா என்பவரும் பேசினர். இரண்டாவதுநாள், சகோ. அஜய் பட்டர், 'பிரிபெக்ட்களின் பங்கு மற்றும் பொறுப்பு' பற்றியும், இத்தாலியைச் சேர்ந்த வொஸ்டோ ருஸ்ஸோ, 'மரியாதை பற்றிய மனப்பாங்கு' என்பது பற்றியும் பேசினர். 3ம் நாள், ம்யூனிக்கின் ஒட்டோ ரெய்செனெடர், 'அன்பு, சரணாகதி பற்றிய மனப்பாங்கு' பற்றி பேசினார். கனடாவின் கிறிஸ்டின் பிரிஸ்லேண்ட், 'ஒரு பிரிபெக்ட் ஆக நான் என்ன கற்றுக் கொண்டேன்' என்பதைப் பற்றிப் பேசும்போது, பாபுஜி மகராஜ் மற்றும் மதிப்பிற்குரிய மாஸ்டர் அவர்களுடன் தன் அனுபவங்களைக் கதைகள் வடிவில் கூறினார். இறுதியில், நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரான, திருப்பூரைச் சேர்ந்த N. பிரகாஷ் அவர்கள் 'அவரை ஆர்வத்துடன் பின்பற்றுங்கள்' என்பது பற்றி பேசினார். கடந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளின் சாராம்சத்தைச் சுருங்கக் கூறி, மாஸ்டரை பின்பற்றி, எதிர்காலத்திற்கான வேலைகளைச் செய்யும் மனப்பாங்கின் மீது கவனம் செலுத்தவும் கூறினார். இந்தியாவின் பல்வேறு இடங்களிலும், இத்தகைய பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பெறும்.

## தீவிரவாதத்தைப் புரிந்து கொண்டு பதில்கொடுத்தல்

'தீவிரவாதத்தைப் புரிந்துகொண்டு பதில்கொடுத்தல்', என்ற தலைப்பில் நடந்த கூட்டத்திற்கு, கூட்டுச் செயலாளர் சகோ. A.P.துரை மற்றும் கர்நாடகா தெற்குமண்டலப் பொறுப்பாளர் சகோ. ஷரத் ஹெக்டே ஆகியோரை, SRCMன் பிரதிநிதிகளாக, மதிப்பிற்குரிய மாஸ்டர் அவர்கள் அனுப்பிவைத்தார். இக்கூட்டம், பெங்களூரின் எக்கூமெனிகல் கிறிஸ்டியன் சென்டரால், (ECC) பிப்ரவரி 22 முதல் 24 வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து, வேறுபட்ட மதங்களைச் சார்ந்த மக்கள், இப்பொருளைப் பற்றிய தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். ஒரு குழுக்கலந்துரையாடல் நடத்தப்பட்டு, அதில் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள பலதுறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் அழைக்கப்பட்டனர்.

ECC யின் இயக்குனர், டாக்டர். மணி சாக்கோ, தனது துவக்க உரையில், மதத்திற்கு அப்பாற்பட்ட நோக்குடன், உலகளாவிய நெறிமுறைகளை அமைக்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றிக் கூறினார். ICSA இயக்குனர், டாக்டர். மோசஸ் மனோகர், இக்கூட்டத்தின் அடிப்படை நோக்கத்தைக் கூறினார். இப்பிரச்சனையை ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டியதன் அவசியப்பற்றியும், அரசாங்கத்தின் கூருணர்ந்துசெயல்படும் தேவைபற்றியும், மதம் சார்ந்த அமைப்புகள், மக்களின் மனசாட்சிக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் பேசினார்.

நிபுணர் குழுக் கலந்துரையாடலில், சகோ. துரை, எவ்வாறு மதத்திற்கு மேம்பட்டு ஆன்மீகத்தை அடைந்து, தனி மனித உள்மாற்றத்தைக் கொண்டுவந்து, அதன் மூலம் திரளான சமுதாய மாற்றத்தைக் கொண்டுவருவது என்பது பற்றிப் பேசினார்.

இக்கூட்டம், பங்கேற்றவர்களால் மிகவும் பாராட்டப்பட்டது. ஆனால், ஆழ்ந்த மதப்பின்னணியில் இருந்து வந்த சிலரிடம், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விளைவுகளை ஏற்படுத்தியது.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## சகோதரிகளுக்கான பயிற்சிமுகாம்



21 மார்ச் அன்று, இந்தூர் மையம், ஒரு தனித்தன்மை வாய்ந்த, அரை நாள் பயிற்சிமுகாம் ஒன்றை, அப்யாசி சகோதரிகளுக்காக ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சியின் ஆய்வுப்பொருள், 'அப்யாசி சகோதரிகள், தாங்கள் ஆற்றும் பன்முகப் பணிகளுடன் சாதனாவை சமநிலைப்படுத்தல்' என்பதாகும். இந்தூர் மற்றும் அதன் அருகிலுள்ள மையங்களிலிருந்து, சுமார் 100 சகோதரிகள் இந்த பயிற்சிமுகாமில் பங்கேற்றனர். சகோதரி விஜயா தேஷ்பாண்டே அவர்கள், 'ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்கும், பொதுவான சாதனா பயிற்சிமுறை இருக்கிறது. மேலும் இறுதியாக பரம்பொருளுடன் கலக்கும் ஆன்மாவும் ஒன்று. எனினும், இந்த பூமியில் வேறுபட்டுச் செயலாற்றும் இரு வேறுபட்ட பாலினங்கள் உள்ளன. நம் அன்பிற்குரிய மாஸ்டர், நாம் இவற்றை எவ்வாறு வித்தியாசமான விதத்தில் செயலாற்ற வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை புரிந்து கொள்வது அவசியமாகிறது' என்பதை விளக்கினார். சகோதரிகள் குடும்பத்தலைவி, ஆசிரியர், மருத்துவர் மற்றும் நீதிபதிகளாக இருந்துகொண்டு, சாதனாவைச் செய்வதால் ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி பகிர்ந்துகொண்டனர்.

இந்த பயிற்சிமுகாமின் இரண்டாவது பாதியில், சாதனாவின்போது, சகோதரிகள் எதிர்கொண்ட பிரச்சினைகள் பற்றிய ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அப்யாசி சகோதரர்கள், இந்நிகழ்ச்சிக்குத் தங்கள் பங்காக, சமையலறை மற்றும் இதர பணிகளில் தன்னார்வத் தொண்டாற்றினர்.


## பதிப்பகத்துறையின் செய்தி

மாஸ்டரின் அதிகாரப்பூர்வ, மற்றும் அதிகாரப்பூர்வமற்ற செய்திகளின் பிரதிகளை, அப்யாசிகள் மின்னஞ்சல்கள் அனுப்புவதும், அதன்மூலம் அது தொடர் மின்னஞ்சலாக மேலும் பலருக்கு அனுப்பப்படுவதும் தெரியவந்துள்ளது. இந்த பிரதிகளில், மாஸ்டரின் சரியான செய்திகளின்றி, தாங்கள் உணர்ந்த, மற்றும் புரிந்துகொண்ட விஷயங்களை, சிலர் கலந்து விடுவதால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால், நமது அமைப்பிற்கு பிரச்சினைகள் உண்டாகும் வாய்ப்புள்ளது.

இம்மாதிரியான அதிகார பூர்வமற்ற சுற்றறிக்கைகள் அனுமதிக்கப்படுவதுமில்லை/ அதிகாரம் வழங்கப்படவுமில்லை என்பதை தயவுசெய்து கருத்தில் கொள்ளவும். இதன் மூலம் அனைத்து அப்யாசிகளும், இத்தகைய தனிப்பட்ட, அதிகாரப்பூர்வமற்ற பிரதிகள் அனுப்புவதைத் தவிர்க்கவும், ஊக்குவிக்காமலிருக்கவும், அதனை நிறுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இம்மாதிரியான செயல்கள் நிகழுமாயின், உடனடியாக பதிப்பகத்திற்கு (print@srcm.org) மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கலாம்.

மாஸ்டரின் அதிகாரப்பூர்வமான உரைகள், மிஷனின் இணையதளத்தில், (www.sahajmarg.org) அந்த நிகழ்ச்சிகள் நிறைவுற்ற சில நாட்களுக்குள் வெளியிடப்படுகிறது. இந்த தகவல்கள் நம் அனைவருக்கும் பொதுவானதாகும்.

## கடந்த காலம் பற்றிய ஒரு பார்வை




பெருமதிப்பிற்குரிய பாபூஜி மஹராஜ் அவர்கள், இந்தியா முழுவதும், 1960 முதல் 1965 வரையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவரது 1964-65 ஆம் ஆண்டின் சுற்றுப்பயண விவரம், சகஜ மார்க்கப் பத்திரிக்கையில் இடம்பெற்றுள்ளது. அதில் தில்லி, விஜயவாடா, ஹைதராபாத், பிதர், சேதாம், குல்பர்க்கா, பிஜாப்பூர், ஹாசன், மைசூர், பெங்களூர், திருவண்ணாமலை, திருச்சி, திருப்பதி, கடப்பா, சென்னை, போபால், ஓரை மற்றும் லக்னோ போன்ற இடங்களுக்கு செல்வதற்கான திட்ட அட்டவணை இடம்பெற்றுள்ளது.

இந்த பயணங்களின்போது, பாபூஜி மஹராஜ் பல செய்திகளைக் கூறியுள்ளார். அவற்றில் சிலவற்றின் சாராம்சம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### செப்டம்பர் 1960

"ஆன்மீகத்திற்கு மிகவும் அத்யாவசியமான ஒன்று, நடுநிலையோடு இருத்தலாகும். இந்த வார்த்தை பரந்த அர்த்தமுடையது. இது நமது வெளிப்புற வாழ்க்கையை, மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில், செப்பனிட்டுக் கொள்ளுதல் மட்டுமன்று, நமது மனம், மற்றும் உடல் சாரந்த அனைத்து செயல்களையும் குறிப்பதாகும்."

*மூலம்:'உலகமளாவிய செய்திகள்' 'என் மாஸ்டரின் செய்திகள்'

### மார்ச் 1964, ஹோலிப் பண்டிகையின்போது பாபூஜியின் செய்தி

"சென்றடைய வேண்டிய இடத்தைப்பற்றி, எவனொருவன் ஏக்கத்துடன் இருக்கிறானோ, அவனால்தான் அதனை அடைய முடியும். அது மட்டுமே ஒரே வழி, மேலும், இதனையேற்றுக் கொண்டவருக்கு அவரது வெற்றி உறுதி. ஆனால், அதற்கு நீங்கள் உங்களது இதயத்தில் வேதனையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். வேதனை உண்டாகும்போது அதற்கான நிவாரணமும் கண்டிப்பாக உடன் வரும். அனைத்து வழிமுறைகளும் சாதனாவும் இதனையே நோக்கமாகக் கொண்டுள்ளன."

"என்றுமே, அனைத்து செயல்களும், கடவுளின் விருப்பப்படியே நடைபெறுகின்றன. ஆனால், இவை நம் முயற்சியால் ஏற்பட்ட விளைவுகள் என்று எண்ணும்போது, சிக்கல்கள் தோன்றுகின்றன. நாம் வெற்றியின்போது கொண்டாடி மகிழ்ந்தும், தோல்வியின்போது வருந்துவதும் மேற்சொன்ன காரணத்தால்தான். இதுவே நாம் பற்றுதலுடன் இருப்பதற்கான காரணமுமாகும். ஆணவம் இல்லாமலிருப்பதென்பது, உண்மையான ஆற்றல்மிக்க உறுதி வருவதாகும். அதனை எப்படி அடைவது? நம்மை மிகுந்த ஆற்றலுடைய தெய்வீகத்துடன் இணைப்பதன் மூலம் மட்டுமே ஆகும். அவ்வாறு செய்வதின் மூலம், அவரின் அருகாமையை நாம் அடையும்வரை, பல்வேறு நிலைகளை, ஒவ்வொன்றாக கடந்துகொண்டிருப்போம்."

"என்னுடன் அமரும் சிலர், சிறிது நேரம் மன அமைதிக்காக வருகின்றனர். அதனாலும் கூட, நான் அவர்களுக்கு ஓரளவு நன்மையுண்டாக்கும் வாய்ப்பினைப் பெறுகிறேன். ஆனால், அது மட்டுமே போதாது. மேலும் சிலர், என்னை சக மனிதராகவும், நண்பராகவும் எண்ணி, ஆனால், சத்தியத்தைப்பற்றி ஒன்றுமறியாமல், என்னுடன் சேர்ந்து பணியாற்ற விரும்புகின்றனர். இது கூட எனக்கு மிகச்சிறிய விஷயமன்று. ஏனென்றால், ஒருவர் அவர்தம் இதயத்தில், எனக்காக அன்பு கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் புத்துணர்வும் பெறுகிறேன். ஆனால் ஒருவர், அவர் விரும்புவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் மிகப்பெரிய ஒரு விஷயமிருக்கும்போது, அவற்றை எனக்காகவேண்டி ஏன் செயலாற்ற வேண்டும்? எவர் ஒருவர், தன்னை இழந்து விடுகிறாரோ அல்லது, அனைத்தையும் இழந்துவிட விரும்புகிறாரோ, ஒரு வேளை அவர் என்னை நோக்கி வரமுடியும். என் மனதின் போக்கு தனிச்சிறப்புடையது. என் செயல்களில் என்னை இழந்து விடுவேன். மற்றவர்களும் இவ்வாறே இருக்கவேண்டும் என்றும் விரும்புவேன்."

*மூலம்:'சகஜ மார்க்கம்' பத்திரிக்கை, ஜுலை 1964.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## கட்டுரை எழுதும் போட்டி 2009 - சான்றிதழ் வழங்குதல்

ஆகஸ்ட் 12, 2009 இளைஞர் தினத்தன்று, ஸ்ரீராம் சந்த்ர மிஷன் மற்றும் ஐக்கிய நாடுகள் தகவல் மையம் இந்தியா & பூனா இணைந்து நடத்திய கட்டுரை எழுதுதல் போட்டியானது, மாஸ்டரின் செய்தியை, குழந்தைகளுக்கும் அவர்களின் மூலம் அவர்களின் குடும்பங்களுக்கும் எடுத்துச் செல்லும் ஒரு பெரு முயற்சியாக அமைந்தது.

மலையெனக் குவிந்த கட்டுரைகளை படிப்பதற்கு, அதிக உழைப்பு தேவைப்பட்டது. மேலும், அதிலிருந்து மிகச்சிறந்தவைகளைத் தேர்ந்தெடுப்பதென்பதே ஒரு பெரிய செயலாக இருந்தது. இந்தியா முழுவதிலுமுள்ள மையங்களிலுள்ள தன்னார்வத் தொண்டர்கள், இந்த பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, தேசிய மற்றும் மண்டல அளவில் மற்றும் பள்ளிகள் அளவில் கட்டுரைகளைத்தேர்வு செய்தனர். பெரிய மையங்களில், சிறந்த கட்டுரைகள் எழுதிய மாணவர்களைப் பாராட்டுவதற்காக, சான்றிதழ் வழங்கும் விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மேலும் இந்த விழாக்களானது, மிஷன் மற்றும் இந்த கட்டுரை எழுதும் போட்டியின் நோக்கம் ஆகியவற்றை மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள் மற்றும் அவர்களுடன் வந்த ஆசிரியர்கள் மத்தியில் எடுத்துரைக்கும் ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது. நமது மிஷன் இந்த போட்டியின்மூலம், குழந்தைகளிடத்தில் நன்னெறியை உண்டாக்க முயல்வதை எண்ணி, பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெருமிதம் அடைந்தனர். பெரும்பாலானவர்கள், சகஜ மார்க்க பயிற்சி முறையால் ஈர்க்கப்பட்டதுடன், அவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளவும், மேலும் பயிற்சி முறையில் சேரும் ஆர்வமும் கொண்டனர். இந்த நிகழ்ச்சி பல்வேறு அப்யாசிகளுக்கு, அவர்களுக்கு உகந்தவகையில் மிஷனுக்காகப் பணியாற்றும் வாய்ப்பினை அளித்தது.

இந்தியாவில் உள்ள மையங்களில், இந்த சான்றிதழ் வழங்கும் விழா, எவ்வாறு கொண்டாடப்பட்டது என்பது பற்றிய அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### பட்டாம்பீ, கேரளா

21 பிப்ரவரி அன்று 32 மாணவர்களுக்கு பரிசளிக்கப்பட்டது. சகோதரர் V. A. கிருஷ்ணன், சகோதரர் K.P. சசிக்குமார் மற்றும் சகோதரர் நாராயணன் ஆகியோர் பங்கேற்பாளர்கள் மத்தியில் உரையாற்றினர். மாணவர்கள் அவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டதுடன், இந்த கட்டுரைத்தலைப்புகள் புதுமையான, வசீகரிக்கின்ற மற்றும் சமீப காலத்திற்கு ஏற்றவையாக இருந்தன என்றும் கூறினர்.

### அகமதாபாத்

அகமதாபாத்தில், 8500க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், சுமார் 190 கல்வி நிலையங்களில், அவர்தம் இடங்களிலேயே கலந்துகொண்டு, அவரவர்களுக்கேற்ற பிரிவுகளில் கட்டுரைகள் எழுதினர். அவர்களில் 6 பேர் மண்டல அளவில் வெற்றியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 28 பிப்ரவரி அன்று, அகமதாபாத்தைச் சேர்ந்த மூத்த அப்யாசிகள், அட்லஜ் யோகாசிரமத்தில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினர். இதில், 1200க்கும் மேற்பட்ட வருகையாளர்கள் (பெற்றோர்கள் மற்றும் போட்டியில் பங்கேற்றவர்கள்) கலந்துகொண்டனர்.

### மொரதாபாத்

இந்த மாவட்டத்தில், 84 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிருந்து, 6700க்கும் மேற்பட்ட மாணவர்கள், கட்டுரைப்போட்டியில் கலந்து கொண்டனர். 24 பிப்ரவரி அன்று, யோகாசிரமத்தில் நடைபெற்ற விழாவில், சகோதரர் சர்வண்குமார் (மையப்பொறுப்பாளர்) மற்றும் சகோதரி சவ்வி ஆகியோர் உரையாற்றினர். கட்டுரைப்போட்டியில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அங்கீகாரச் சான்றிதழ்களும் அளிக்கப்பட்டன. சிறப்பு விருந்தினர் திரு. ராம் மூர்த்தி, (முதன்மை மேம்பாட்டு அதிகாரி, மொரதாபாத்) குழந்தைகளிடத்தில் இந்த நிகழ்ச்சியின் மூலம் நன்னெறியை ஏற்படுத்தும் மிஷனின் முயற்சிகளைப் பாராட்டினார்.

### அபேதோன்புரா, உத்திரப்பிரதேசம்

21 பிப்ரவரி அன்று, சுமார் 180 மாணவர்களும், 220 பெற்றோர்களும், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள்




மற்றும் முதல்வர்களும், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். அங்கு நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டிகளின் மூலம், மாணவர்கள் மற்றும் அவர்களுடைய காப்பாளர்களுக்கு ஏற்பட்ட பயன்களைப் பற்றிய உரையாடல்களைத் தொடர்ந்து, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### கோலாப்பூர், மகாராஷ்ட்ரா

18 பிப்ரவரி அன்று, விழா நடைபெற்றது. மொத்தமாக 75 பள்ளிகள் மற்றும் 6 கல்லூரிகள் பங்கேற்க, சுமார் 3500 கட்டுரைகள் சேகரிக்கப்பட்டன. மகாரஷ்டிரா மண்டலப்பொறுப்பாளர் சகோதரர் சுபாஷ் வைத்யா உரை நிகழ்த்தினார்.

### ஔரங்காபாத், மகாராஷ்ட்ரா

27 பிப்ரவரி அன்று, வெற்றிபெற்ற மாணவர்களுக்கு, அவர்தம் பெற்றோர்கள், மற்றும் பள்ளி முதல்வர்கள் கூடியிருக்க, பரிசளிக்கும் விழா நடைபெற்றது.

### நாக்பூர், மகாராஷ்ட்ரா

24 பள்ளிகளிலிருந்து, 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள், இந்த கட்டுரைப்போட்டியில் கலந்துகொண்டனர். மார்ச் 7 அன்று, காந்திநகர் ஆசிரமத்தில் பரிசளிக்கும் விழா நடத்தப்பட்டது.

### இந்தூர்

சுமார் 24 மையங்கள் சேர்ந்து, 21 பிப்ரவரி அன்று, ஒரு வரவேற்புக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தன. தன்னார்வத்தொண்டர் குழுக்கள், ஒவ்வொரு பள்ளியாகச் சென்றது மட்டுமின்றி, மாணவர்களின் இல்லங்களுக்குச் சென்று பெற்றோர்களையும் இந்நிகழ்ச்சிக்கு அழைத்தனர். இதன் விளைவாக, சிறிய மற்றும் தொலைதூர மையங்களிலிருந்தும், அதிக அளவில் மக்கள் வந்திருந்தது, நமது முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதுபோல் இருந்தது. சுமார் 3000 முதல் 3500 வருகையாளர்களுக்கு, இந்த வரவேற்புக்கூட்டம் மூலம், சகஜ மார்க்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

### பூனா

நான்டேட் ஆசிரமத்தில் நடைபெற்ற விழாவில், சகோதரி ரூபாலி அவர்கள், "பொதுவாக நாமனைவரும் எதிர்மறை எண்ணங்கள் கொண்டவர்கள். இந்த நிலை மாற வேண்டும். இளம் வயதினர் தங்களுக்குள் பார்க்க கற்றுக்கொண்டு, தனக்குள் உள்ள சுயத்தை அறிந்துகொண்டு, அதன்மூலம் இந்த உலகத்தை எதிர்கொள்ள வேண்டும். ஏனெனில் அக உலகத்திற்கேற்றபடியே வெளியுலகமும் அமையும்" என்று கூறினார். சகோதரர் கௌஷ்துப் அவர்கள், இந்நிகழ்ச்சிபற்றிய புள்ளி விபரங்களை பகிர்ந்துகொண்டார். சகோதரர் சுக்லா (சிறப்பு விருந்தினர்) "சகஜ மார்க்கம் என்பது மனதிற்கு பயிற்சியளிக்கும் ஒரு அமைப்பு" என்ற தலைப்பில் பேசினார். போட்டியில் பங்கேற்ற மாணவர்களை பாராட்டும் விதமாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### பெங்களூர்

21 பிப்ரவரியன்று, பெங்களூரில் பனசங்கரி ஆசிரமத்தில், மண்டலம் முழுவதிலும் பங்கேற்ற மாணவர்களுக்கு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முதல் பரிசுபெற்ற ஒவ்வொரு பிரிவினைச் சேர்ந்தவர்களும் அழைக்கப்பட்டு, அவர்களின் கட்டுரைகளைப் படிக்கும்படி கூறினர். அனைத்து மாணவர்களும், குறிப்பிட்டுச் சொல்லும் வகையில், தன்னம்பிக்கையும் மற்றும் தங்களுக்கு வழங்கப்பட்ட தலைப்புகளில் ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலும் தங்களுக்கு இருப்பதை வெளிப்படுத்தினர். அப்யாசிகளின் இளம் மற்றும் தன்னம்பிக்கைமிக்க குழந்தைகளால், அறிவியல் சோதனைகள் மூலம் எப்படி நன்னெறிகளை கற்றுக்கொள்ள முடியும் என்பதை VBSE பரிசோதனைகள் மூலம் நடத்திக்காட்டியது, வருகையாளர்களின் இதயங்களைத் தொட்டது. மாஸ்டரின் ஒரு

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

சிறிய ஒலி ஒளி படத்தைத் தொடர்ந்து, சகோதரி மாதுரி வெங்கட் அவர்கள், சகஜ மார்க்கத்தின் நோக்கம்பற்றி சுருக்கமாக அறிமுகவுரை நிகழ்த்தினார்.

### பாவ்நகர், குஜராத்

21 பிப்ரவரி அன்று, வெள்ளிமணி (silver bell) தியான அரங்கத்தில், இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கட்டுரை ஒருங்கிணைப்பாளர் சகோதரி விருசிகா, பாவ் நகர் பற்றிய புள்ளி விபரம் அளிக்க, சகோதரர் வினய் (நவ்சாரி) கட்டுரை ஒருங்கிணைப்பாளர் மற்றும் பாவ் நகர் மையப்பொறுப்பாளர் சகோதரர் தர்மேஷ்பாய் ஆகியோர் உரைகள் நிகழ்த்தினர்.

### பூஜ்

27 பிப்ரவரி அன்று, பூஜ்ஜிலுள்ள சாயோக் அரங்கத்தில், 250 வருகையாளர்களைக் கொண்டு ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த கட்டுரைப் போட்டியில் பங்குபெற்ற, 32 பள்ளிகள் மற்றும் அதன் முதல்வர்கள், பெற்றோர்கள் மற்றும் சான்றிதழ் பெற வேண்டிய மாணவர்கள் ஆகிய அனைவரும் அழைக்கப்பட்டிருந்தனர். திரு. மகேந்திரசிங் இதற்கு சிறப்பு விருந்தினராவார். மையப்பொறுப்பாளர் சகோதரி ஹர்ஷா சவ்ஹான் மற்றும் கட்டுரை ஒருங்கிணைப்பாளர் சகோதரர் கோபி திரிவேதி உரை நிகழ்த்தினர். இதேபோன்று, காந்திதாம் மையத்தில், அஞ்சர் பகுதியின் MLA சிறப்பு விருந்தினராகவும் மேலும் காந்திதாம் நதராட்சியின் தலைவர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். 180க்கும் மேற்பட்ட வருகையாளர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### சண்டிகர்

இந்த வருடத்தில் 16 பள்ளிகள், 4 கல்லூரிகள் மற்றும் பஞ்சாப் பல்கலைக்கழகம், சண்டிகர், பஞ்சகுலா மற்றும் மொஹாலியைச் சேர்ந்த பல்வேறு கல்வித்துறைகள், இந்தப் போட்டியில் பங்கேற்றன. 28 பிப்ரவரி அன்று, மண்டல அளவில் வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டும் வகையில் ஏற்படுத்தப்பட்ட விழாவில், மண்டலக் கட்டுரை ஒருங்கிணைப்பாளர் சகோதரி கணன் சச்தேவோ, சகோதரி குருதேவ் கர் மற்றும் சகோதரி சுதர்சன் போன்றோர் உரையாற்றினர். மண்டல அளவில் வெற்றிபெற்ற 27 மாணவர்களுக்கு, மண்டலப்பொறுப்பாளர் Maj. Gen. ஹர்பஜன் சிங் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

### லூதியானா

11 ஏப்ரல் அன்று, பஞ்சாப் விவசாயப் பல்கலைக்கழதத்தில் உள்ள ஜேக்கப் அரங்கத்தில், மண்டல அளவில் 8 மாணவர்களும், மாவட்ட அளவில் 40 மாணவர்களும் வெற்றிபெற்றமைக்காகப் பாராட்டப்பட்டனர். மண்டல அளவில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ், புத்தகம் மற்றும் ஒரு நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு 'My Master' புத்தகமும், சான்றிதழும் வழங்கபட்டது. சிறப்பு பங்கேற்பாளர் கோப்பை வழங்கப்பட்டு, புனித தாமஸ் பள்ளி கௌரவிக்கப்பட்டது. சிறந்த கல்வியாளர்களான, டாக்டர் M. A.ஜாகீர், டாக்டர் பிரேம் குமார் மற்றும் மண்டலப்பொறுப்பாளர் Maj. Gen. ஹர்பஜன் சிங் போன்றோர் இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

4 ஏப்ரல் அன்று, பானிபட் ரிபைனரி அதிகாரிகள் கிளப்பில், 35 மாணவர்களை வாழ்த்தும் வண்ணம், பானிபட் மையம் ஒரு விழாவை ஏற்பாடு செய்திருந்தது. சிறப்பு விருந்தினர்கள் திரு. ராஜ் குமார் கோஷ் மற்றும் அஷ்வானி சர்மா வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். அனைத்து உள்ளூர் அப்யாசிகளும் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

### கோயம்புத்தூர்

22 பிப்ரவரி அன்று, 60 பள்ளிகளைச் சேர்ந்த 120 மாணவர்கள், அவர்களுடைய பெற்றோர்களுடன் நாச்சிபாளையம் ஆசிரமத்திற்கு வந்திருந்தனர். மையப்பொறுப்பாளர் சகோதரர் K.R. வைத்தியநாதன் வரவேற்புரை வழங்க, அதனைத் தொடர்ந்து சகோதரர் T.S. மணியம் மற்றும் சகோதரி K. ஈஸ்வரி ஆகியோர் உரையாற்றினர். சகோதரர் வெங்கட்ராமன் மாணவர்களுக்கு புத்தகங்களுடன் சான்றிதழ்களை வழங்கினார். அங்கு, மண்டல அளவில் வெற்றிபெற்ற நான்கு மாணவர்களுக்கு, 'என் மாஸ்டர்' புத்தகமும் சான்றிதழும் வழங்கப்பட்டது. நான்கு நிறுவனங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### குவஹாத்தி




ஏப்ரல் 4 அன்று, குவஹாத்தியைச் சுற்றியுள்ள பள்ளிகளிலிருந்து, தலா 2 சிறந்த கட்டுரைகள் வீதம் தேர்வுசெய்யப்பட்ட 90 வெற்றியாளர்களுக்கு, சான்றிதழ் வழங்குவதற்காக, சகோதரர் பாண்டே ஒரு நிகழ்ச்சியை நடத்தினார். குழுமியிருந்தவர்களுக்கு, சகோதரர் அசோக் சென்குப்தா அவர்களால் ஒரு விளக்கவுரை வழங்கப்பட்டது. அங்கு சுருக்கமாக ஒரு கேள்வி-பதில் பகுதியும் இடம்பெற்றது.

### ஹுப்ளி, கர்நாடகா

இந்த கட்டுரைப்போட்டியானது, ஹுப்ளி மற்றும் தார்வாடைச் சேர்ந்த தன்னார்வதொண்டர்களிடையே பெருமளவு ஊக்கத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தியது. சிறப்பு விருந்தினரான விஷ்ணு பாஸ்கர் பட், இன்றைய சமுதாயத்தில் இது போன்ற செயல்பாடுகளின் முக்கியத்துவம் பற்றிப் பேசினார். இது போன்ற ஒரு மிஷன் எந்தவித விளம்பரமும் இன்றி செயல்படுவதுபற்றி அவர் அறிந்திருக்கவில்லை. அரசுப்பள்ளியின் தலைமை ஆசிரியர், திரு. சாரங்மத் அவர்கள், மிகச்சில நபர்கள் மற்றும் நிறுவனங்களே அவர்கள் சொல்வது போலவே நடக்கவும் செய்கிறார்கள். அதுபோன்ற ஒன்றுதான் SRCM என்பதை புரிந்துகொண்டதாகக் கூறினார். சுமார் 70 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இளம் வயதினர் மற்றும் குழந்தைகளால் நடத்தப்பட்ட இரண்டு குறுநாடகங்கள், நல்ல பொழுதுபோக்காகவும் அனைவராலும் விருப்பப்படும் வகையிலும் இருந்தன.

### லக்னோ

180 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள், லக்னோவில் கலந்துகொண்டனர். சகோதரர் U.S.பாஜ்பாய் அவர்கள், அந்தந்த பிரிவுகளில் முறையே வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். மண்டலப் பொறுப்பாளர் சகோதரர் ஷ்யாம்ஜி மெஹ்ரோத்ரா அந்த விழாவில் உரையாற்றினார்.

### தேஜ்பூர்

11 ஏப்ரல் அன்று, வெற்றிபெற்ற மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட 200 வருகையாளர்கள் கூடியிருந்தனர். ஒரு சில பங்கேற்பாளர்கள் பயிற்சிமுறை தொடங்குவது பற்றிய தங்களது ஆர்வத்தை வெளிக்காட்டினர். இந்த நிதழ்ச்சி மிஷன் பிரார்த்தனையுடன் நிறைவுபெற்றது.

### திருச்சூர், கேரளா

திருச்சூரில் உள்ள யோகாஷ்ரமத்தில், 28 பிப்ரவரி ஞாயிற்றுக்கிழமையன்று, மையப்பொறுப்பாளர் சகோதரர் T. P. நாராயணன் அவர்கள், பல்வேறு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களையும், மாணவர்கள்தம் பெற்றோர்களையும் வரவேற்புரை வழங்கி வரவேற்றார். 31 பள்ளிகள் மற்றும் கல்லாரிகளைச் சேர்ந்த சுமார் 800 மாணவர்கள், இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். SMRTI ஒருங்கிணைப்பாளர் சகோதரர் A. மாதவன் சிற்றுரை வழங்கினார். மண்டலப் பொறுப்பாளர் சகோதரர் K.U. மோகன் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், நிறுவனங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கினார்.

### வதோதரா

28 பிப்ரவரி அன்று, அல்காபுரியிலுள்ள பரோடா உயர்நிலைப்பள்ளியில், சுமார் 200 வருகையாளர்கள் கூடியிருந்தனர். சகோதரி பூனம் பப்பெர், சூரத்தைச் சேர்ந்த டாக்டர் சுரேந்திரா அகர்வால், சகோதரி பிரபா சர்மா மற்றும் சகோதரர் கிரண் ஷா போன்றோர் உரைகள் நிகழ்த்தினர். விழா பற்றிய கருத்துக்கள் பங்கேற்பாளர்களிடமிருந்து எழுத்து வடிவில் பெறப்பட்டன. அதில் பெரும்பாலானோர் சகஜ மார்க்கதில் சேர விருப்பம் தெரிவித்திருந்தனர்.

# அப்யாசி பயிற்சி திட்டம்

## மொராதாபாத்

அப்யாசி பயிற்சி திட்டத்தின் முதல் நிலை, மொராதாபாத் மையத்தில் மார்ச்7 ஆம் தேதியன்று நடைபெற்றது. சகோ. சுதான்ஷு இப்பயிற்சி திட்டத்தை நடத்தி வைத்தார். இதில் சுமார் 30 அப்யாசிகள் கலந்து கொண்டனர். பாபுஜி மற்றும் மாஸ்டரின், அரிதான ஒலி/ஒளி நிகழ்ச்சி திரையிடப்பட்டதைக்காண, அவர்கள் பெரிதும் உவகை அடைந்தனர். பின்னர் அவர்கள் பேசிய போது, இம்மாதிரி பயிற்சி திட்டம், புது அப்யாசிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையுமென குறிப்பிட்டனர். இப்பயிற்சிக்குப்பின், தாங்கள் சகஜ மார்க்க முறையைப்பற்றி ஒரு தெளிவான கண்ணோட்டத்தைப் பெற்றதாகவும், மற்றும் குறிக்கோளை அடைய, இது ஒரு தூண்டுகோலாகவும் அமையுமென குறிப்பிட்டனர்.

## நனௌதா

அப்யாசி பயிற்சித்திட்டத்தின் முதல் நிலை ஏப்ரல் 4 ம் தேதி ஞாயிறன்று, சகோ. ராஜீவ் குமார் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது. இதில் 24 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீவில்லிப்புத்தூர்

விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிப்புத்தூரில், அப்யாசி பயிற்சி திட்டம், மார்ச் 7ம் தேதி, சகோதரி பொன்னுத்தாய் மற்றும் சகோ. V.பாலசுப்பிரமணியன் அவர்களால் நடத்தப்பட்டது. இதில் ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், திருத்தாங்கல், மற்றும் சிவகாசி மையங்களிலிருந்து சுமார் 25 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அவர்கள், இத்திட்டம் புது அப்யாசிகளுக்கு மட்டுமின்றி மற்றவர்கட்கும் மிகவும் பயனுள்ளதாக அமையுமென கருத்து தெரிவித்தனர்.

## கர்நூல்

பிப். 28 ம் தேதியன்று, 23 புது அப்யாசிகளுக்காக, கர்நூலில் ஒரு அப்யாசி பயிற்சி திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில், அநேக வினாக்களுக்கு விளக்கங்கள் பெறப்பட்டன. அப்யாசிகள் அதில் ஆர்வமுடனும் இணைந்தும் பங்கேற்றனர். மாஸ்டரின் ஒலி/ஒளி பரப்பு நிகழ்ச்சி, சாதனாவின் அடிப்படை கருத்துக்களை விளக்கும் வண்ணமாக அமைந்ததென அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

பெல்லாரி

பிப். 14ம் தேதி பெல்லாரியில், சகோ. சொன்ட சுதாகர் இல்லத்தில் அமைந்த தியானக்கூடத்தில், அப்யாசி பயிற்சி திட்டம், கன்னட மொழியில் நடத்தப்பட்டது. இதில், 25 அப்யாசிகள் கலந்து கொண்டனர். சகோ. நிஜலிங்கப்பா, சகோ. பிரகலாத் பக்னிகர் மற்றும் சகோ. ராஜு காஷம்பூர்கர் இதில் சொற்பொழிவாற்றினர். அப்யாசிகள், மிகவும் பயனடைந்ததாகவும், இம்மாதிரி திட்டம் அடிக்கடி நடைபெறவேண்டுமெனவும் கருத்து தெரிவித்தனர்.

## சிக்கா

தொலை தூரத்திலுள்ளதும், ஜாம் நகரின் புதிதாக உருவாக்கப்பட்ட உபநகரமுமான சிக்காவில், 60 ஆர்வமிக்க அப்யாசிகள் வசிக்கின்றனர். அவர்களுக்காக, ஏப்ரல் 11ம் தேதியன்று, அஹமதாபாத் சகோ. அங்கித் வியாஸ், பயிற்சி திட்டத்தை நடத்திவைத்தார். அவர், ஒளித்தகடுகளை காட்டி, ஹிந்தியில் விளக்கமளித்தபொழுது, பங்கேற்றவர்களின் ஆர்வத்தை கண்ணுற முடிந்தது. மாஸ்டரின் பேச்சுக்கள் ஒலி பரப்பப்பட்ட பொழுது, அவரின் அருகாமையை எல்லோரும் உணர்ந்தனர்.

## ராஜ்நந்த்காவ்

மார்ச் 28 ம் தேதியன்று, ஹிந்தியில் அப்யாசி பயிற்சி திட்டதிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், பக்கத்திலுள்ள மையங்களிலிருந்து 60க்கும் மேற்பட்ட அப்யாசி சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டனர். சகோ. தீபக் தியாகியும், சகோ. விஜய் ஐயரும் இதை நடத்திவைத்தனர். அப்யாசிகள் இதில் முதல் முதலாக பங்கேற்றதைக் குறித்தும், படித்தும் அதன்படி நடப்பதைக் குறித்தும், வினா-விடை நிகழ்ச்சியில் அவர்களின் எல்லா கேள்விகளுக்கும், மாஸ்டரை மேற்கோள் காட்டியும் அவரின் ஒலி/ஒளித்தகடுகள் மூலம் விளக்கம்பெற முடிந்ததையும் காண அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## பெந்த்ரா

சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள, பெந்த்ரா என்னுமிடத்தில் நடைபெற்ற அப்யாசி பயிற்சி திட்டத்தில், 58 சகோதர சகோதரிகள் கலந்து கொண்டனர். இதில், 40 சகோதரிகள் கிராமவாசிகளாவர். இருப்பினும் அவர்களின் ஆர்வமும், பங்கேற்றலும் நினைக்கவொண்ணாவிதமாக அருமையாக அமைந்தது. அச்சூழலே பண்டாராவை ஒத்திருந்தது. அப்யாசி பயிற்சித்திட்டம், சகோ. தீபக் தியாகி, சகோ. ஸ்ரீநிவாஸ் மற்றும் சகோதரி லலிதா தியாகியால் நடத்தப்பட்டது. இதை, சகோ.ஸ்வப்னில் கத்ரி ஏற்பாடு செய்திருந்தார்.

## ராய்பூர்

ஏப்ரல் 4ம் தேதி நடத்தப்பட்ட ஹிந்தி அப்யாசி பயிற்சி திட்டத்தில், 52 அப்யாசிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். வினா-விடை நிகழ்ச்சி, சகோ. தீபக் தியாகியால் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது. அப்யாசி பயிற்சி திட்டம், சகோ. விஷ்ணு உபாத்தியா, சகோ. சதீஷ் சர்மா மற்றும் சகோ. தேவநாராயணனால் நடத்தப்பட்டது.

## பிலாஸ்பூர்

ஹிந்தி அப்யாசி பயிற்சி திட்டம், மார்ச் 7ம் தேதி நடைபெற்றது. SMRTIயினால் வடிவமைக்கப்பட்ட இத்திட்டத்தை, எல்லா அப்யாசிகளும் பாராட்டினர்.

## துர்க்

ஹிந்தி அப்யாசி பயிற்சி திட்டம், பிப். 21ம் தேதி, மையப்பொறுப்பாளர் சகோ. D.K.நிகம் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. ஆர்வமும் அமைதியும் மிக்க சூழ்நிலையில் 37 அப்யசி சகோதர சகோதரிகள் இதில் பங்கேற்றனர். மண்டல பொறுப்பாளர் சகோ. தீபக் தியாகி மற்றும் சகோ. ஸ்ரீநிவாஸ் தேஷ்முக் இதை முன்னின்று நடத்தினர். சகோ. தீபக் தியாகியால் நடத்தப்பட்ட வினா-விடை நிகழ்ச்சியை எல்லோரும் ரசித்தனர்.

## ஜாம்நகர்

கூட்டமிக்க நகரக்கூடத்தில், 'சமச்சீரான வாழ்வும், தியானமும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அப்யாசிகள் இத்தருணத்தை உபயோகித்து, தங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் உடன் பணிபுரிபவர்களை இந்த கருத்தரங்கிற்கு அழைத்து, சகஜ மார்க்க முறையைப்பற்றி அவர்களுக்கு முன்னுரை அளித்தனர். இக்கருத்தரங்கு, மரபையொட்டிய இரு நாட்டிய நிகழ்ச்சியுடன் ஆரம்பமாயிற்று. சகோ. ஜயஸ்ரீபென் லால்பாய், சகஜ மார்க்கத்தில் ஏற்பட்ட தன் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். தினசரி வாழ்வில், தியானம் மூலமாக, சமச்சீரான வாழ்வை அமைத்துக் கொள்ளவதின் தேவையை வற்புறுத்தினார்.

சகோ. ஹரேன்பாய் ஷா, சகஜ மார்க்க தியான முறை பற்றியும், தினசரி வாழ்வில் அதன் தாக்கத்தைப்பற்றியும் விளக்கமளித்தார். சகோ. சுரேஷ் ராஜகோபாலன், மனித வாழ்வின் உன்னத ஆன்மீக நிலையை அடைய, சகஜ மார்க்க முறை எவ்விதம் தகுதி கொண்டது என்பதப்பற்றியும், பொருள் சார்ந்த வாழ்வில் இருந்து கொண்டே, எவ்விதம் ஆன்மீக வாழ்க்கையிலும் முன்னேறலாம் என்பதையும் எடுத்துரைத்தார்.

எல்லா உரைகளுக்குப்பின், பார்வையாளர்கள், பேச்சாளர்களுடனும், SRCM தன்னார்வத்தொண்டர்களுடனும் கலந்துரையாடினர். சிலர், சகஜ மார்க்கத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டினர். சிலர் சகஜ மார்க்கத்தில் சேர விரும்புவதாகக் கூறினர்.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# ஒளி மையம்

"ஆசிரமத்தில் உள்ள வேறுபாடு என்ன? மிக உயர்ந்த மாஸ்டரால் ஆசிரமம் சக்தியூட்டப்படுகிறது. நாம், தியானம் செய்யும் பொழுதெல்லாம், அந்த சக்தி அதிகரிக்கப்படுகிறது. கோவில்களில் குறைந்து வரும் அச்சக்தி, ஆசிரமத்தில் அதிகரிக்கிறது. எனவே, உங்கள் ஆசிரமங்களில், நீங்கள் எதைச்செய்யவேண்டுமோ அதனைச் செய்துவந்தால், 50 வருடங்களுக்குப்பின், 'இதுதான் சொர்க்கம், இதுதான் ஒளி உலகம்' என்று நீங்கள் சொல்லக்கூடியதாக, மிகமிக மென்மையான, மேலும் சக்தி பெறப்பட்ட, இனிமையான சூழல் அங்கு இருக்கவேண்டும்".
ஜனவரி எ, உ00ச ஒங்கோல் ஆசிரமதிறப்புவிழா

## ஒங்கோல் ஆசிரமம்

### சிறிய நகரத்தில் பெரிய இதயங்களின் உருவாக்கம்



ஒங்கோல், ஆந்திரப்பிரதேசம் பிரகாசம் மாவட்டத்தின் தலைமைச் செயலகம் ஆகும். 1969ம் ஆண்டு, பாபுஜி மகராஜ் மெட்ராஸ் சென்று கொண்டிருந்தபோது, கடும் புயல், வெள்ளம் காரணமாக அவர் பயணித்த புகைவண்டி, எளிதில் அடைய முடியாத ஒரு இடத்தில், 72 மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டது. அது, ஒங்கோல் மற்றும் உப்புகுந்துரு என்னும் கிராமத்திற்கு இடையே உள்ள இடமாகும். அந்த சமயத்தில், ஆன்மீக விதைகளை பாபுஜி மகராஜ் அவ்விடத்தில் விதைத்திருக்கவேண்டும். அதன் பயனாக, இன்று சில நூறு அப்யாசிகளைக் கொண்ட, முழு வளர்ச்சி அடைந்துள்ள மையம் அங்கு உள்ளது.



1990ம் ஆண்டு முற்பகுதியில், ஒங்கோலின் முதல் பிரிபெக்டான சகோ.K.குப்புசுவாமி மற்றும் ஒருசில அப்யாசிகளே இருந்தனர். 1994ல் மிஷனில் சேர்ந்த சகோ.B. நாகேஸ்வரராவ் அவர்களின் சிறப்பான தொண்டால், மிஷன் நன்கு வளர்ச்சி அடைந்தது. 1999ல், ஒங்கோல் மற்றும் சிமாகுர்தி, மெடரமெட்ட, அடான்கி ஆகிய கிராமங்களில் இருந்து வந்து சேர்ந்தவர்களால், அப்யாசிகளின் எண்ணிக்கை 350 ஆக உயர்ந்தது. சகோ. நாகேஸ்வரராவ் பிரிபெக்ட் ஆக நியமிக்கப்பட்டு, அவரது இல்லத்தில் சத்சங்கங்கள் நடைபெற்றன. ஒரு ஆசிரமத்திற்கான தேவை மிகவும் உணரப்பட்டது. உள்ளூர் அப்யாசிகளின் ஒத்துழைப்புடன், ஒங்கோல் நகரத்தின் புறநகர்ப்பகுதியில், S.N.படுமண்டலின் பேர்னமிட்டா கிராமத்தின் எல்லைக்குள், ஆசிரமத்திற்கு 5 ஏக்கர் நிலமும், குடியிருப்பு காலனிக்கு, 49 ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டன.

டிசம்பர் 22, 2000 அன்று, மாஸ்டர் அந்த இடத்திற்கு வருகை புரிந்து, அடிக்கல் நாட்டி, கட்டிட வேலைக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தார். மேலும் இருமுறை வருகை தந்து, கட்டிட வேலைகளின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டார். ஜனவரி 7, 2004 அன்று, புதிய ஆசிரமத்தை அவர் திறந்து வைத்து, 'தர்மாஷ்ரம்' எனப் பெயரிட்டு, அதை, அவரது குரு பாபுஜி மகராஜ் அவர்களுக்கு அர்ப்பணித்தார்.

நிகழ்ச்சியில், 6000 அப்யாசிகள் கலந்து கொண்டனர். பெரிய நகரத்தின் மையத்தில் பொருந்தும் வண்ணம், ஒரு சிறிய நகரத்தில், வியக்கும் வண்ணம் ஒரு ஆசிரமம் அமைக்க, தயக்கமின்றி உதவிய உள்ளூர் அப்யாசிகளின் தொண்டினை ஏற்றுக்கொண்ட மாஸ்டர், அதனை ஒப்புக்கொள்ளும் விதத்தில் 'இதயங்களைக் கொடுத்தல்' என்ற பொருளில் உரையாடினார்.



முன்புறம் பெரிய படிக்கட்டுக்களைக் கொண்ட, 2000பேர் அமரக்கூடிய விஸ்தாரமான தியானக்கூடம் கட்டிடத்தின் முதல் தளத்திலும், அடித்தளத்தில் தங்கும் விடுதியும், மற்றும் மாஸ்டர் காட்டேஜ், சமையலறை, கழிப்பறைகள், மேலும் ஒரு ஜெனரேட்டரும் உள்ளன. ஆசிரமத்தின் சுற்றுச்சூழலை மிகைப்படுத்தும் வகையில், அழகான இயற்கைக்காட்சியும், நிழல் தரும் மரங்களும் உள்ளன. இலவச உணவுமையங்களாக அறிவிக்கப்பட்ட ஆசிரமங்களுள், ஒங்கோலும் ஒன்றாகும். தினமும் காலை 6.30மணிக்கு, சத்சங்கம் நடைபெற்று வருகிறது.





**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**
© 2009 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.